

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஒன்றியம், மதகொண்டப்பள்ளி மாதிரிப் பள்ளியில், பள்ளிக் கல்வித் துறை சார்பாக, மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கான மாதாந்திர மீளாவுக் கூட்டம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (24.11.2023) துவக்கி வைத்து உரையாற்றினார். உடன் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு.ஜெ.குமரகுருபரன், மாநில திட்ட இயக்குநர் திருமதி.கஜலட்சுமி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே.எம்.சரயு உள்ளிட்ட பலர் உள்ளனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்டம், சத்திரம் பேருந்து நிலையம் அருகில் உள்ள செயின்ட் ஜோசப் பள்ளி மைதானத்தில், திருச்சி புத்தகத் திருவிழா 2023ஐ நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் 23.11.2023 அன்று தொடங்கி வைத்து, அரங்கினை பார்வையிட்டும், புத்தகத் திருவிழா சின்னத்தை வெளியிட்டும், ”தூரிகையில் திருச்சி மற்றும் தூய காற்றே எனும் நூல்களை வெளியிட்டு விழாப் பேருரையாற்றினார்கள். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மத்திய மண்டல காவல்துறை தலைவர் க.கார்த்திகேயன், , மத்திய மண்டலத் காவல் துறை துணைத் தலைவர் பகலவன், , மாநகர காவல் ஆணையர் திருமதி.காமினி, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் டாக்டர். ஆர்.வைத்திநாதன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வி.வருண்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.இனிகோ இருதயராஜ், சீ.கதிரவன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.அபிராமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் தேவநாதன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ரமேஷ்குமார், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(பொது) செல்வி.சா.சரண்யா, மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### டிச. 3 அன்று உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு

# மாற்றுத்திறன் குழந்தைகளை ஊக்குவிக்க பல்வேறு நிகழ்ச்சிகள்!

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அறிவிப்பு!

சென்னை, நவ.26-

உலக மாற்றுத்திறனாளிகள் தினமானது, ஆண்டு தோறும் டிசம்பர் மூன்றாம் நாள் அனுசரிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் மாணவர்களை ஊக்குவித்து, அவர்களை மகிழ்விக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் இவ்வாண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகளினால் சிறப்புக் குழந்தைகளின் அறிவாற்றல் மற்றும் தன்னம்பிக்கை மேம்படுவதுடன், அவர்களின் சமூக ஒருங்கிணைப்பும் வலுப்பெறும்.

அவ்வகையில், நேற்று முன்தினம் (24.11.2023) திருச்சிராப் பள்ளி மாவட்டத்திலிருந்து பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்த 18 மாணவர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் திருச்சிராப்பள்ளி யிலிருந்து சென்னைக்கு விமானம் மூலம் அழைத்துவரப்பட்டு, அவர்களுக்கு சிறப்பானதொரு பயண அனுபவம் அளிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் செயல்படும் அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் பார்வை, செவி மற்றும் அறிவுசார் மாற்றுத்திறன் மாணவர்கள் 189 நபர்கள் மெட்ரோ இரயிலில் பயணிக்கும் அனுபவத்தினை பெறும் வகையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உதவியுடன் 27.11.2023 அன்று காலை 11.30 மணியளவில் எழும்பூர் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து சென்னை விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையம் வரை சென்று மீண்டும் திரும்பும் வகையில் பயண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 27.11.2023 அன்று மாலை 3.30 மணியளவில் பொழுதுபோக்கு நிகழ்ச்சியாக மேற்காணும் மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட சிறப்பு பள்ளி மாணவர்களுக்கு சிறப்பான அனுபவமளிக்கும் வகையில் சென்னை இராயப்பேட்டையில் அமைந்துள்ள தனியார் திரையரங்கில் திரைப்படக் காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்ட சிறப்பு பள்ளிகளில் பயிலும் 58 மாற்றுத்திறன் மாணவர்கள் தமிழ்நாட்டின் தலைச்சிறந்த சுற்றுலா தலமான மகாபலிபுரம் சுற்றுலா தலத்தினை "புதிய வால்வோ சிறப்பு பேருந்தில்" பயணித்து, கண்டுகளிக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியினை 29.11.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைப்பார்கள்.

இத்தகைய பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதன் வாயிலாக, சிறப்பு குழந்தைகள் மிகவும் தன்னம்பிக்கை பெற்று உற்சாகமடைவதுடன், அவர்களது சமவாய்ப்பு மற்றும் சமூகத்துடனான முழுபங்கேற்பு ஆகியவை உறுதி செய்யப்படும்.

இந்நிகழ்ச்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் மற்றும் சத்தியம் திரையரங்கம் ஆகிய அமைப்புகளுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

### சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமை! தி.மு.க. மாணவர் அணி சார்பில்-குற்றாலத்தில்

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம்!

## பேராசிரியர் சுப.வீரபாண்டியன் - கம்பம் செல்வேந்திரன் - த.சோழராஜன் சிறப்புரை!

தென்காசி, நவ.26-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிந்தனை, சொல், செயல் வடிவமாய் விளங்கும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கு மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம், தென்காசி மாவட்டம், குற்றாலம், ராயல் கிரீன் ரிசார்டின் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (24.11.2023) காலை 10.30 மணியளவில் கழக மாணவர் அணி துணைச் செயலாளர் அதலை பி. செந்தில்குமார், வரவேற்புரை வழங்கினார். பேராசிரியர் சுப. வீரபாண்டியன் பங்கேற்று சிறப்பித்தார்.

நிகழ்ச்சிக்கு, வருகைத் தந்த அனைவரையும் கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., தலைமை ஏற்று பயிலரங்கத்தின் நோக்கத்தை விளக்கி எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சிக்கு, கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் இரா. ராஜீவ்காந்தி, சி.ஜெரால்டு, எஸ். மோகன், மன்னை த. சோழராஜன், சேலம் ரா. தமிழரசன், பி. எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், பூர்ண சங்கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி. கோகுல் நன்றியுரை வழங்கினார்.

### சூலூர் செந்தலை கவுதமன் சம்பந்தி

# அரும்பாவூர் பெ.குறளன்பன் மறைவு!



சூலூர், நவ. 26 -

சூலூர் பாவேந்தர் பேரவை புலவர் செந்தலை கவுதமன் அவர்களின் சம்பந்தி புலவர் அரும்பாவூர் பெ.குறளன்பன் 23.11.2023 அன்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தனித்தமிழ் இயக்கத்திலும் திராவிடர் இயக்கத்திலும் நீண்ட காலம் பெருமுனைப்புடன் உழைத்த மொழிப்போர் தியாகியும் திருக்குறள் பற்றால் கோவிந்தசாமி எனும் தனது பெயரை குறளன்பன் என மாற்றிக்கொண்டவரும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான பெ.குறளின் பன் 23.11.2023 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் இயற்கையெய்தினார்.

அன்னாரது உடல் அடக்கம் நேற்று முன்தினம் (24.11.2023) பகல் 12 மணியளவில் சூலூர் மின் மயானத்தில் நடைபெற்றது.

மறைந்த பெ.குறளன்பனுக்கு கலாவதி என்ற மனைவியும், மரு.கு.இளந்தமிழன் என்ற மகனும், மரு. கு.இசையமுது என்ற புதல்வியும் உள்ளனர்.

### அரியலூர் மாவட்டம் வருகை தந்த

# இளைஞர் அணி 2 ஆவது மாநில மாநாடு விளக்க இருசக்கர வாகனப் பிரச்சாரம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் உற்சாக வரவேற்பு அளித்தார்!

அரியலூர், நவ.26-

கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன்மற்றும்விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் "மாநில உரிமை மீட்பு இரண்டாவது மாநில மாநாட்டிற்கான இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியை" கடந்த 15 ஆம் தேதி கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை முன்பாக தொடங்கி வைத்தார்.

இந்த இருசக்கர வாகனப் பேரணி,அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர் ஜெயங்கொண்டம் தொகுதிக்கு வருகை புரிந்ததையொட்டி இரு சக்கர வாகனங்களில் வந்த இளைஞர்களை மாவட்ட எல்லையான ஜெயங்கொண்டம்ஒன்றியம்,மேலணிகுழி கிராமத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர்சா.சி. சிவசங்கர் உற்சாக வரவேற்பு அளித்து,

வருகை தந்த இளைஞரணி பிரச்சார தோழர்களுடன் இருசக்கர வாகனத்தில் மீன்சுருட்டி, ஜெயங்கொண்டம் குறுக்கு ரோடு, ஜெயங்கொண்டம் கடைவீதி தா.பழூர், சித்தமல்லி,வி.கைகாட்டி,கீழபழூர், அரியலூர் கடைவீதி வழியாக அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக ரவுண்டானா அருகே கழகத்தின் பிரச்சார பீரங்கிகளாக சுற்றி வலம்வந்து கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு வாழ்த்துகளும், நன்றியும் தெரிவித்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேரணியை வரவேற்றார்.

இப்பேரணியில் இளைஞரணி நிர்வாகிகளுடன் மாவட்டக் கழக செயலாளர்,தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் 100 கிலோ மீட்டர் தூரம் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்று பொதுமக்களிடம் மாநாட்டின் நோக்கம் குறித்து பிரச்சாரம் செய்தார்.

இப்பேரணியில் கழக சட்டத்திட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ. க.கண்ணன், கழக கொள்கை பரப்பு துணைச்செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்பி. பாலசுப்ரமணியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ இளையராஜா, மாவட்டத் துணை செயலாளர்கள் மு.கணேசன்,லதாபாலு, சி.சந்திரசேகர்,மாவட்ட பொருளாளர் கு. இராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், வா.செளந்தரராஜன், மா.அன்பழகன், கோ.அறிவழகன், அசோகசக்ரவர்த்தி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி. எழில்மாறன், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ. கருணாநிதி,

பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.சி. லூயிகதிரவன், க.தர்மதுரை, எஸ்.ஆர்.இராமராஜன், என்.ஆர்.இராமதுரை, செ.இளஞ்செழியன், செல்வம், எம்.ஜி.இராஜேந்திரன்,ஆதி.இளங்கோவன், ரவிகுமார், ஜெயகுமார்,கொன்டியார் செல்வராஜ், பானுமதி இராஜேந்திரன், மீனா சாமிநாதன், வின்செண்ட் ராஜா,கருப்புசாமி,தங்க.இராமகிருஷ்ணன், குலோத்துங்கன், க. அருண்ராஜா, நகர்மன்ற தலைவர் சாந்திகலைவாணன், துணைத் தலைவர் கலியமூர்த்தி, கழக வழக்கறிஞர்கள் சின்னதம்பி, கதிரவன் ,இராஜா,முத்தமிழ்செல்வன், மணிமாறன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் முருகேசன், வசந்தபகலவன், வீரசிவா,வேலு, முத்தமிழ்செல்வன், பாலமூர்த்தி, இளம்பரிதி, கதிரவன், நகர இளைஞரணி அமைப்பாளர்கள் ஆ.கரிகாலன், சரவணன், நகரகழக நிர்வாகிகள் இராஜமாணிக்கம், மாலாதமிழரசன், இராஜேந்திரன், மணிவண்ணன், முரசொலி குமார், பா.ரமேஷ், கொளஞ்சியப்பா, மா.செ. செந்தில்குமார், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வட்டக் கழக செயலாளர்,கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## (ஐந்தாவது பட்டியல்)

**தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**புதுச்சேரி மாநிலம்**

அமைப்பாளர் - **எஸ்.பி. மணிமாறன், எம்.பி.ஏ., எம்.பில்., எல்.எல்.பி.,**நெ.63, வ.உ.சி.வீதி, சஞ்சய்காந்தி நகர், புதுச்சேரி - 605 011.

துணை அமைப்பாளர்கள் - ந. கண்ணன், டி.சி.இ., நெ.55, 3-வது குறுக்குத் தெரு, சக்தி நகர், சாரம், புதுச்சேரி - 605 013. ஐ.அமுதன், பி.எஸ்.சி., நெ.41/37, 2-வது குறுக்குத் தெரு, கம்பன் நகர், ரெட்டியார்பாளையம், புதுச்சேரி - 605 010. வீ. கீர்த்தி எழனி, டி.சி.டி., நெ.3, கடலூர் மெயின் ரோடு, காட்டுகுப்பம், மணப்பட்டு அஞ்சல், புதுச்சேரி - 607 402. ஏ. ஸ்டீபன் ராஜ், பி.காம்., நெ.67, கென்னடி நகர், சு.பிள்ளை சத்திரம், புதுச்சேரி - 605 001. ரா. ஸ்ரீ ஹரி, பி.டெக்., டி. 208, சீனுவாச அப்பார்ட்மெண்ட், அஜீஸ் நகர், ரெட்டியார்பாளையம், புதுச்சேரி - 605010. அ. தமிழ்மகள் ஜான்சிராணி, எம்.பி.ஏ., நெ.101, குண்டுசாலை, மூலகுளம், புதுச்சேரி - 10. எம்.முத்தரசன், டி.எச்.எம்.சி.டி., நெ.4/பி, சங்கரதாஸ் வீதி, புதுச்சேரி - 605 001.

**சென்னை தெற்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **பா. அருண்குமார், பி.எஸ்.சி., (விஸ்காம்), எம்.ஏ., எம்.பில்., எல்.எல்.பி.,** நெ.1/32, கிழக்குக் கடற்கரை சாலை, கொட்டிவாக்கம், சென்னை - 600 041.

துணை அமைப்பாளர்கள் - ஆ. ஈஸ்வரமூர்த்தி, எம்.சி.ஏ., எம்.பி.ஏ., நெ.1/88, ஷேசாத்ரி இல்லம், மடிப்பாக்கம், ஸ்ரீராமுலு தெரு, மடிப்பாக்கம், சென்னை - 600 091. ஜெ. சீனிவாசன், பி.சி.ஏ., நெ.30ஏ, பொன்மனசெம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை-78. எஸ்.கே. தமிழ்வேல் கவி, பி.ஏ., எல்.எல்.பி., நெ.15, தலையாரித் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033. எஸ். விஷ்ணு, பி.காம்., பி.எல்., எச்.ஐ.ஜி.-II, 557, 8வது குறுக்குத் தெரு, முகப்பேர் ஏரித்திட்டம், சென்னை - 600 037. ப. தமிழ்செல்வம், பி.இ., நெ.11/6, யாதவாள் 2வது தெரு, விருகம்பாக்கம், சென்னை - 600 092. எஸ். யமுனா ஸ்ரீ, பி. காம்., நெ.79-பி பிளாக், கக்கன் காலனி, பெசன்ட் நகர், சென்னை - 600 090.

**சென்னை கிழக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **வானவில் விஜய், எம்.ஏ., எல்.எல்.பி.,** நெ.19/20, எ-பிளாக், சன்னதி தெரு, லேண்ட் மார்வல் ஃப்ளாட்ஸ், வில்லிவாக்கம், சென்னை - 600 049.

துணை அமைப்பாளர்கள் - கு. வேணுகோபால், டி.இ.சி.இ., நெ.56, சோழபுரம் பிரதான சாலை, டி.வி. நகர், அம்பத்தூர், சென்னை - 600 082. எஸ். பாலாஜி, டி.சி.இ., நெ.2/3, பாஷா சாகிப் 1வது சந்து, புதுப்பேட்டை, சென்னை - 600 001. எஸ். மதனரூபன், பி.ஏ., நெ.22/53, மயிலப்பன் தெரு, அயனாவரம், சென்னை - 600 023. எஸ்.எஸ். மணிகண்டன், டி.இ.இ.இ., நெ.5/11, சாய் சுப்ரீம் ஃப்ளாட்ஸ், சாமியார் தோட்டம், வில்லிவாக்கம், சென்னை - 600 049. அசோக் ஆண்ட்ரூஸ், பி.இ., நெ.180/1, சென்னை ஃப்ளாட்ஸ், பாடிக்குப்பம் ரோடு, சென்னை - 40. ம. ஜெயலட்சுமி, பி.ஏ., நெ.201, டி-பிளாக், காந்திநகர், பல்லவன் சாலை, சென்னை - 09.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 24-11-2023

**சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



விழுப்புரம் வடக்கு மாவட்டம்செஞ்சியை அடுத்த நங்கிலிகொண்டானில் நடைபெற்ற தி.மு.க. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். அருகில் மாநில இளைஞரணி துணை அமைப்பாளர்அப்துல் மாலிக், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் உள்ளனர்.


**தமிழ்நாடு அரசு**
**பொதுப்பணித்துறை - கட்டட அமைப்பு - ஒப்பந்த முறை : மொத்தத் தொகை ( இரு உறை முறை)**
**மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு எண். 46/ TVM- CLE / 2023 - 2024/ Dated. 24.11.2023**

கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் திருவண்ணாமலை பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட சிறப்பு தலைமைப் பொறியாளர் அவர்களால் அட்டவணையில் காணும் பணிகளுக்கு **29.12.2023** அன்று அலுவலக நேரப்படி பிற்பகல் **3.00** மணிவரையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இரு உறை முறையில் வரவேற்கப்படுகின்றன. **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **30.11.2023** முதல் **29.12.2023** அன்று பிற்பகல் **3.00** மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதிகாண் படிவம் என குறிக்கப்பட்ட உறை (உறை எண்.1) மட்டும் **29.12.2023** அன்று **Server System** நேரப்படி பிற்பகல் **4.00** மணியளவில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் திறக்கப்படும்.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு ஜி.எஸ்.டி உட்பட (ரூபாய் இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) | பணி முடிக்க வேண்டிய காலம் (பருவ காலங்கள் உட்பட) |
|---|---|---|---|---|
| 1. | திருவண்ணாமலை மாவட்டம்,திருவண்ணாமலையில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட கிரிட்டிகல் கேர் பிளாக்குகள் கட்டடம் கட்டும் பணி. | 1870.00 | ரூ.9,45,000 | 15 மாதங்கள் |
| 2. | கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் உள்ள அரசு மருத்துவமனையில் 50படுக்கைகள் கொண்ட கிரிட்டிகல் கேர் பிளாக்குகள் கட்டடம் கட்டும் பணி. | 1885.00 | ரூ.9,53,000 | 15 மாதங்கள் |

ஒப்பந்தக்காரர் தகுதி : வகுப்பு I மற்றும் அதற்கு மேல்.
முன் வைப்புத் தொகைகளை இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். விலை வீத மாறுதல் **(Pirce adjustment Clause)** மேற்காணும் பணிகளுக்கு பொருந்தும். முன் தகுதி பெறும் ஒப்பந்தக்காரர்களுக்கு விலை விவர ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் தனியே தெரிவிக்கப்படும்.
இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

**சிறப்பு தலைமைப் பொறியாளர், பொ.ப.து.,**
**கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ) வட்டம், திருவண்ணாமலை -4**

**செ.ம.தொ.இ / 6349 / ஒப்பந்தப்புள்ளி /2023**


# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சங்கராபுரம் அ.ஆசிம்

**நவம்பர் 26 (2019)**



**இளம் வயதிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் பேரூர்ச் செயலாளராகவும், ஒன்றிய அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1966, 86 ஆகிய இரண்டு முறை சங்கராபுரம் பேரூராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**